***கவனிக்க.****-2021.02.12 ஆந் திகதிய 2215 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2216 - 2021 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2021.02.19

*2216 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 40 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.***- (i) *சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(iii) *இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ( திருத்தம்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


39 - B 08205 - 353 (2021/02)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திரு. கங்கொடவிலகே குணசேன பெரேரா அவர்களின் 2020.03.01 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா, கௌரவ உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

கமல் குணரட்ன,
மேஜர் ஜெனரல் ( ஓய்வு),
டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூவீ
ஆர்எஸ்பீ யூஎஸ்பீ எஸ்டிசீ பிஎஸ்சீ,
செயலாளர்,
உள்ளகப் பாதுகாப்பு,
உள்நாட்டலுவல்கள்
மற்றும் அனர்த்த முகாமைத்துவ
இராஜாங்க அமைச்சு.

கொழும்பு-05,
2020, ஒற்றோபர் 13.

2-497

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

சிலாபம் மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திருமதி ராஜபக்ஷ கோறாளலாகே ரீட்டா ப்ளோரன்ஸ் நெதலி வினிபிரட் கல்தேரா அவர்களின் 2019.04.12 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா, கௌரவ உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

கமல் குணரட்ன,
மேஜர் ஜெனரல் ( ஓய்வு),
டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூவீ
ஆர்எஸ்பீ யூஎஸ்பீ எஸ்டிசீ பிஎஸ்சீ,
செயலாளர்,
உள்ளகப் பாதுகாப்பு,
உள்நாட்டலுவல்கள்
மற்றும் அனர்த்த முகாமைத்துவ
இராஜாங்க அமைச்சு.

கொழும்பு-05,
2020, நவெம்பர் 13.

2-498

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்**

கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்தினுள் ஆங்கில மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திரு. ஹிமாஷ இசுரு பாலபட்டபெந்தி அவர்களின் 2019.11.14 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா, கௌரவ உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

கமல் குணரட்ன,
மேஜர் ஜெனரல் ( ஓய்வு),
டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூவீ
ஆர்எஸ்பீ யூஎஸ்பீ எஸ்டிசீ பிஎஸ்சீ,
செயலாளர்,
உள்ளகப் பாதுகாப்பு,
உள்நாட்டலுவல்கள்
மற்றும் அனர்த்த முகாமைத்துவ
இராஜாங்க அமைச்சு.

கொழும்பு-05,
2020, ஒற்றோபர் 13.

2-499

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.